# கர்மாக்களால் வரும் தீமைகளும் தீர்வுகளும்

## விளக்கவுரை

1. கர்மாக்களின் வினைப்பயன் என்பது உயிரும் உடலும் போலாகும். இவ்விரண்டிலும் பலப்பல விஷயங்கள் உள்ளன. அவையனைத்தும் இயல்பாக சாதாரணமான மனிதர்களுக்கும், மனித வாழ்க்கைக்கும் முழுவதுமாக தேவையில்லை. ஏன் என்றால்?

2. கர்மவினை என்பது மனிதர்களுக்கு மட்டுமில்லை பிறக்கின்ற, ஜீவராசிகள் அனைத்திற்குமே உண்டு என்ப தாலும், இதில் நல்ல கர்ம வினையும் உண்டு, தீய கர்ம வினையும் உண்டு. ஆகையால் மனிதர்களுக்கு மட்டும்.

3. கர்ம வினையினால் ஏற்படுகின்ற துன்பங்களும், தீரா துயரங்களும், அவரவர் கர்ம வினைக்கு ஏற்ப நோய்க ளாகவும், வழி, வழியாக துரத்திக் கொண்டு வரும். அதை போல சாபங்களும், பாவங்களும் ஏற்பட்டு இவைகளினால் குடும்பம் முதல் சந்ததியர்கள் வரைக்கும் பிறப்பு முதல் இறப்பு வரையிலும் தொடர்ந்து பலவிதமான வழிகளிலும் துன்பங்களை பலபேர் அனுபவித்து வருகின்றனர் என்பது திண்ணமே.

4. அப்படி வருகின்ற துன்ப துயரங்கள் எப்படி வருகின்றன? எதனால் வருகின்றன? ஏன் வருகின்றன? என்று எழும் பலவிதமானக் கேள்விகள் பல விதத்தில் வேதனைப் படுவோர்களின் மனதிலும் உள்ளத்திலும் ஏற்படுகின்றன. அப்படி ஏற்படும் பொழுது அதுதான் எந்தவித கர்மவினை? ஏன் எங்களுக்கு மட்டும் இந்தக் கர்மவினை? இப்படி ஒரு தீய

துன்பங்களை செய்து கொண்டு இருக்கிறது. ஏன் நல்ல கர்ம பலனே எங்களுக்கு கிடைக்காதா? என்று ஏங்கி இதற்கான தீர்வைத் தேடி, தேடி ஓய்ந்து போயும், பணம் இழந்தும், வாடிப்போய் வாழ்வதே எங்களின் வினைப்பயனா? அவ்வளவு கர்மாவையா செய்திருக்கிறோம்? இதைத் தீர்க்க அந்தக் கடவுளுக்கு கூட கண்ணில்லையா? என்று துன்பப் படுகின்றோரே!

5. உங்களுக்கெல்லாம் இந்தக் கர்மவினைகளில் இருந்து விடுபட்டு வேதனைகளும், சோதனைகளும், துன்பங்களும், துயரங்களும், நோய்களும், இவைகளினால் ஏற்படும் மன வேதனைகளுக்கெல்லாம் இந்தப் புத்தகம் வாயிலாக தீர்வுக்கு வழிகாட்டி நிம்மதி கிடைத்து நல்ல கர்ம வினையாக மாற்றி, மகிழ்வோடு வாழவைப்பதற்கான அற்புதமான மார்க்கமே இந்த புத்தக மாகும்.

6. முதலில் இந்தக் கர்மவினை என்றால் என்ன என்பது அது எந்த வழியில் நம்மைப் பிடிக்கின்றது என்று ஒரு சிறு தொகுப்பாகக் கொடுத்துவிட்டு, அதில் இருந்து எந்த விதமான தீர்வு பெறுவீர்கள் என்பதை சித்தர்கள் வழியில் கொடுக்கப்பட்டிருக்கும் வழிபாடுகளை அவரவர் கர்ம வினைக்கேற்ப இந்தப் புத்தகத்தின் வாயிலாக தொகுத்து வழங்கியுள்ளேன். இதில் கர்மவினை தீர்ந்து நல்ல கர்ம வினை தொடங்கும் காலம் உள்ளவர்களுக்கே இந்த புத்தகம் கிடைக்கும். கிடைக்கப் பெற்றவரே கர்மவினை தீர்ந்தோரே. இதோ அந்தச் சிறு தொகுப்புகள்:

7. இந்தக் கர்மா என்பது சத்தியமாகிய ஆன்ம ஞானமும், அசத்தியமாகிய மாயா காரியமும் கூடி உண்டாவதே இந்தக் கர்மாவாகும். இவை பிரளயகாலத்தில் (பிரளய காலம் என்பது உலகம் அழிந்து மீண்டும் புதிதாய் தொடங்கும் காலம்) என்றும் இதை முன்ஜென்மம் என்றும் கூறுவர்.

8. இப்படி முன் ஜென்மத்தில் நீ செய்த நல்லவை, கெட்டவை களையும், பாவ புண்ணியங்களையும், அறிந்து அதற்கேற்ப செயல்களைத் தருவதும், நீ பிறந்ததும் நீ செய்த முன்ஜென்ம வினைகள் எனப்படும் கர்மாவை என்ன என்பதை உனக்கு நினைவுப்படுத்தும் பெருட்டு பெரும் துன்பமும், பேரின்ப முமாகவும் விளைந்த பிறகு ஆன்மாக்கள் பொருட்டு தரும் மனம், வாக்கு, காயம் இவைகளின் வாயிலாக வினைப்பயன் என்ற முன்ஜென்ம கர்மாக்களின் பயனாக விளையும் வினையே கர்ம வினை யாகும்.

9. இந்த மனம், வாக்கு, காயம் என்பதன் பொருள் மனிதர்களுக்கு ஏற்படும் உணர்வேயாகும். அவை வழி வழியே அவரவர் செய்யும் செயலின் பலனேயாகும். இவைகளுக்கு மூன்று வித கர்மாக்கள் எனப்படும். அவை **1.சஞ்சிதம் 2.பிராரப்தம் 3.ஆகாமியம்** என்று மூன்று வகைப்படும். இது மனிதர்களை கர்மாவாக ஆட்கொண்டு பாவப்படுத்தி, துன்பத்தில் ஆட் படுத்தும் கர்மாவாகும். இந்த கர்மாவிற்கு விதி, மதி, கதி என்றும் ஒரு பெயர் உள்ளது. இந்த மூன்று கர்மாவிற்குள் **காதிகர்மா, அகாதிகர்மா, ஞானவரேன்ய கர்மா, மோகநீய கர்மா, அந்தராயகர்மா, தர்சனாவரணிய கர்மா** என்று பலவகை கர்மாக்கள் அடங்கி உள்ளன. மேலும்,

10. இந்த சஞ்சிதம், பிராரப்தம், ஆகாமியம் என்ற கர்மாக்கள் எப்படி நமக்கு செயல்படுகின்றன என்றால், அவையும் மூன்று உள்ளன. **1. ஆதியாத்மிகம் 2. ஆதிதெய்வீகம் 3. ஆதிபௌதிகம்** என்ற இந்த மூன்று கர்மாவும் வினைப் பயனாக மூன்று வழிகளிலும் நமக்கும், உலகுக்கும், இயற்கை சார்ந்தும் ஏற்படும் கர்மவினையாகும். அவைகளின் விளக்கங்கள்;

## 1. ஆதியாத்மிகம்:

இவை உங்களாலே உங்களுக்குகே உண்டாகும் தீங்குகளும், உங்களுக்கு பிறவழிகளான, விலங்குகள், பறவைகள், விஷப் பூச்சிகள், அரசியல்வாதிகள், பகைவர்கள், துரோகிகள், பொறாமை, வீடு, மனை, சொத்துக்கள், பணம், பொன், பொருள்கள், தேவை யற்ற இச்சை போன்றவைகளால் உங்களுக்கு பெருந்துன்பம் ஏற்படுத்தும் என்பது ஆதியாத்மிகம் (ஆதியான்மிகம்) எனப்படும் கர்மாவாகும். ஆதியாத்மிகம் என்பதற்கு ஆதியான்மிகம் என்றும் ஒரு பெயர் உள்ளது.

## 2. ஆதிதெய்வீகம்:

இவை நீங்கள் பிறக்கும் பொழுது ஒவ்வொருவரின் தாயின் கருவிலேயே நீ முன் ஜென்மத்தில் செய்த தீவினையை பொருட்டு உண்டாவதாகும். அது தீராத கவலை, பிறவித்துன்பம், எளிதில் நரை, திரை, மூப்பும் உண்டாகி இறுதியில் சுவர்க, நரகத்தை நிர்ணயப்படுத்தும் கர்மம், இந்த ஆதிதெய்வீகமாகும்.

## 3. ஆதிபௌதீகம்:

இவை நமக்கு இயற்கையால் ஏற்படுகின்ற நன்மைகளும், தீமைகளும் ஆகும். குளிர், வெப்பம், மழை, காற்று, மின்னல், இடி, புயல், கடல் கொந்தளிப்பு (சுனாமி) போன்றவைகளால் நல்லவைகளும் நடக்கும். அழிவும் ஏற்பட்டு மடியவும்கூடும் என்பது ஆதிபௌதீக கர்மமாகும்.

ஆக இம்மூன்று கர்மாவின் தொகுப்புகளே நாம் படுகின்ற கவலைகளும், பெரும் துன்பங்களுமாகும். மாறாக மிக சொற்பமான வர்களுக்கே நற்கர்மாவாக நல்லவைகள் நடந்து மகிழ்வோடு வாழவைக்குமாம்.

இவை நமக்குள் எப்படி கர்மவினையாக வருகின்றன. சஞ்சிதம், ஆகாமியம், பிராரப்தம் என்ற இந்த மூன்று கர்மாவின் வழியேதான் என்பதின் விளக்கத்தைப் பார்ப்போம்:

## 1. சஞ்சிதம்:

சஞ்சிதம் என்பது நீங்கள் முற்பிறவிகளில் செய்த வினை களை முழுமையாக அனுபவித்து முடிக்காமலும், அதனை மிச்சம் வைத்து இப்பிறவியில் பிறந்து அந்த மிச்சத்தை அனுபவிக்க செய்வதே சஞ்சித கர்மா எனப்படும். இவை ஆதிதெய்வீகத்தினுள் அடக்கம் என்பதையும் புரிந்து கொள்ள வேண்டும்.

## 2. பிராரப்தம்

மேற்குறிப்பிட்ட சஞ்சித கர்மாவை நீங்கள் பிறந்த இப் பிறவியில் பிறப்பு முதல் இறப்பு வரையிலும் இக்கர்மா செயல்படுத்தி, ஆட்கொண்டு துன்பங்களை அனுபவிக்க காரணமாவதே இந்த பிராரப்த கர்மாவாகும். இவை ஆதியாத்மிகம் (ஆதிஆன்மிகம்) கர்மாவினுள் அடக்கம். அடுத்து,

## 3. ஆகாமியம்

இவை மேற்குறிப்பிட்ட பிராரப்த கர்மாவின் வழி இப் பிறவியில் பிறந்து நீங்கள் செய்த அத்தனை வினைகளையும் நீங்கள் இப்பிறவியிலேயே முழுமையாக அனுபவிக்காமல், அரை குறையாக அனுபவித்து மிச்சம் மீதம் உள்ள வினைகளை அடுத்த பிறவியில் அனுபவிக்க தொடரச் செய்யும் கர்மா இந்த ஆகாமிய கர்மாவாகும். அது மட்டுமின்றி எடுத்த இந்தப் பிறவியில் நமது அறிவு, இச்சை, என்ற செயல்களினால் மனிதர்களுக்கோ அல்லது பிற உயிரினங்களுக்கோ மனம், வாக்கு, சரீரத்தினால் நாம் செய்த வினைகளும் பாவ, புண்ணியங்களாக உருவெடுத்து ஆகாமியம் என்று பொருளாகிறது. (ஆ+காமியம் = ஆகாமியம், ஆ=ஆன்மா, காமியம்=விருப்பம், இச்சை) இது, ஆதிதெய்வீகம், ஆதிஆத்மிகம், ஆதிபௌதீகம் என்று மூன்று கர்மாவிற்கும் உட்பட்டதேயாகும்.

ஆக, சஞ்சிதம், பிராரப்தம், ஆகாமியம், ஆதியாத்மிகம், ஆதிதெய்வீகம், ஆதிபௌதீகம் (ஆதிஆன்மீகம்) என்ற இந்த ஆறு கர்ம வினைகளும் அவைகளின் உட்பிரிவில் உள்ள சில கர்மாக்களின் தொகுப்பே சிலரைத் தவிர பலர் அனுபவிக்கும் பெரும் வேதனையும், அவஸ்தையும், துன்பங்களும், சங்கடங்களும், துர் மரணங்களும் போன்ற எத்தனையோ விதங்கள் உண்டு. அவைகளுக்கும் இந்த ஆறு வித கர்மாக்களுக்கும், அதனுள் அடங்கியிருக்கும் மற்ற கர்மாக்களுக்கும் என்ன தீர்வு? இவை இயல்பான மனித வாழ்க்கையில் எந்தெந்த வழியில், எப்படியெப்படி, எதனைக் கொண்டு உங்களை செயல்படுத்தி துன்ப வலையில் சிக்க வைத்து வேதனைப்பட வைக்கிறது, அதற்கு சித்தர் வழியில் என்ன தீர்வு? என்ற விளக்கங்களையும் பார்ப்போம்.

முதலில் நீங்கள் பிறந்த ஜாதகத்தின்படி லக்னம், நட்சத்திரங்கள், இராசிகளின் படியும் மற்றும் பல்வேறு காரணங்களின் படியும்தான் இதில் விளங்கங்களையும் தீர்வுகளையும் தொடர்ந்து பார்க்கப் போகிறீர்கள். அதற்கு முன்பாக நீங்கள் கடைப்பிடிக்க வேண்டிய ஒருசில கர்ம விதிகளை விளக்குகிறேன். இதே விதிமுறைகளை முடிந்தவரை கடைப் பிடித்து பெரிதும், கர்மாக்களினால் ஏற்படும் வினைப்பயனில் இருந்து வருமுன் காத்திடவும், துன்ப, சாப, பாவங்களிலிருந்தும் தப்பித்துக் கொண்டும் அதற்கு முதலில் என்ன என்ன செய்யலாம், எதை தவிர்க்கலாம், எதைக் கடைப்பிடிக்கலாம் என்பதைப் பார்ப்போம்.

## கடைப்பிடிக்கவேண்டியவைகள்:

1. ஒவ்வொருவரும் விடியற்காலை பிரம்ம முகூர்த்தம் என்று சொல்லக்கூடிய அதிகாலை நேரம் மூன்றிலிருந்து ஆறு மணிக்குள் படுக்கையை விட்டு எழுந்திருக்க வேண்டும்.

2. அப்படி எழும்பும் போதே தங்களுக்குப் பிடித்தமான, இஷ்டமான தெய்வங்களை மனதிலே நிறுத்தி சில நொடிகள் தியானித்து பிறகு எழுந்து அன்றைய கடமைகளைத் தொடங்கவும்.

3. கண்டிப்பாக காலையும், மாலையும் என இரு வேளையும் மலம்கழிக்க வேண்டும். பகலில் வடக்கு நோக்கியும், மாலையில் தெற்கு நோக்கி உட்கார்ந்து மலம்கழிப்பது நல்லது. (இவை முடிந்தால் கடைப்பிடிக்கலாம்)

4. நீரிலோ, பசுமையாக உள்ள புல்தரையிலோ, நல்ல விளைச்சல் தரும் வயலிலும் அதிகம் பொதுமக்கள் நடமாடும் இடங்களிலும், சுடுகாட்டிலும் மலம் கழிக்கக் கூடாது.

5. மல ஜலம் கழித்துவிட்டு சுத்தமாக பல்துலக்கி விட்டு, நன்றாக குளித்துவிட்டு அதன்பிறகு இறைவனை பிரார்த்தனை செய்துகொண்டு உங்கள் தினப் பணிகளை தொடர வேண்டும்.

6. குளிக்கும் பொழுது தண்ணீரை தொட்டுக் கொண்டு **ஓம், ஹம், ஹம்ச யோகமயா கங்கா மாத்ரே இரட்சிப்பாய் இரட்சிப் பாய்** - என்று மூன்று முறை சொல்லிவிட்டு குளிக்கவும்.

7. நீங்கள் தினமும் உபயோகப்படுத்தும் வாகனம், உங்கள் படுக்கை, நீங்கள் தானமளிக்கும் பாத்திரங்கள், இவைகளை மிகவும் சுத்தமாக வைத்துக்கொள்ள வேண்டும்.

8. கண்டிப்பாக கணவன், மனைவி, பிள்ளைகள் ஒழுக்கங்களில் சிறந்திருக்க வேண்டும்.

9. பிறருடைய பொருள் எதுவாயினும் அவை புனிதமற்றவை என்று நீங்கள் கருதிக்கொண்டு அதனை ஒதுக்கிவிட வேண்டும். ஒருக்காலமும் அடுத்தவர்களின் பொருளை நீங்கள் உபயோகப்படுத்தக் கூடாது.

10. மிக முக்கியமாக சூரிய உதயத்தின் பொழுதும், சூரியன் அஸ்தமிக்கும் பொழுது அந்தச் சூரியனை நீரிலோ, கண்ணாடியிலோ, நிழலாகவோ பார்க்கக் கூடாது.

11. ஒருவர் நல்ல விஷயங்களை சொல்லும் பொழுது அவரை குறுக்கிட்டுப் பேசுதல் கூடாது. முறையற்ற வழிகளில் ஆடை உடுத்துவதும், ஆடையின் நுனிகளை வாயில் வைப்பதும், திருகுவதும், திருகி காது குடைவதும் கூடாது.

12. இரு கைகளால் உடலை சொறியக் கூடாது. மருத்துவர், அரசர், இவர்களும் மற்றும் ஆறுகள் இல்லாத இடங்களிலும் மேலும் கீழ்த்தரமான புத்தியுடையவர்கள் அதிகம் உள்ள இடத்தில் வசிக்கவே கூடாது. அதேபோல முகத்தை கையினால் மூடிக்கொண்டு சிரிப்பதோ, தும்முவதோ, கொட்டாவி விடுவதோ கூடாது.

13. எந்த விதமான நோய்கள் வந்தாலும் அதை அலட்சியப் படுத் தாமல், உடனே மருத்துவரை அணுக வேண்டும். உங்களுக்கு எதிரியாக யார் இருந்தாலும், அவர்கள் பலமோ, பலமேயில் லாமலோ இருந்தாலும் அவர்களை கண்காணிக்காமல் இருக்கவே கூடாது.

14. வெளியில் சென்றுவிட்டு மீண்டும் வீட்டிற்கு திரும்பி வந்து முகத்தையும், கைகால்களையும் கழுவி சுத்தமாக வைத்துக் கொள்ள வேண்டும். இப்படி நீங்கள் கடைப்பிடிக்க இன்னும் எத்தனையோ விஷயங்கள் இருக்கின்றன அவ்வளவு விஷயங்களையும் முழு விளக்கமாக அடுத்து வரும் புத்தகத்தில் காணலாம். இப்பொழுது ஒவ்வொருவருக்கும் ஏற்படும் பிரச்சனைகள் எந்த வழியில், எந்தக் கர்மாவினால் ஏற்படுகிறது அதற்கான விளக்கமும், தீர்வுகளையும் ஒவ்வொன்றாக இப்புத்தகத்தில் காண்போம்.

# அந்தராய கர்மாவும் இதன் விளக்கமும்

**முதலில் நீங்கள் பிறந்த நேரத்தின் ஜாதகப்படி லக்கினம், இராசிகள், நட்சத்திரங்களின் வழி இந்த அந்தராய கர்மாவின் சந்தேகங்களை தீர்த்துக்கொள்ளுங்கள்.**

இன்று பிள்ளைகள் பெற்று, இதில் ஆண், பெண் பிள்ளை களுக்கு உட்பட்டு சிலர் சிறுவயதிலும், பலர் பிள்ளை களின் குறிப்பிட்ட வயதிலும், அதைப் போலவே ஒருசில இளம் பெண் பிள்ளைகளும், சில ஆண் இளைஞர்களும் தன் எதிர்கால வாழ்க்கை எப்படி இருக்கும்? என்ன மாதிரியான வாழ்க்கை அமையும்? என்பதையும் தான் மேற்கொண்டு என்ன படிக்கலாம்? எந்தத் துறையில் படித்தால் நல்லது? அரசாங்க உத்தியோகம் கிடைக்குமா? அல்லது என்ன தொழில் செய்யலாம்? எனக்கு உத்தியோகம்தானா? அல்லது தொழிலா? அல்லது வெளிநாடு போவது என்றால் நன்றாக இருக்குமா? வெளிநாடு சென்று மேற்கொண்டு படித்தால் நன்றாக இருக்குமா? என்று பல முக்கிய கேள்விகள் பெற்றோர்களுக்கும், பிள்ளைகளுக்கும் ஏற்பட்டு சோதிடர்களை அணுகி அதற்கான விடையை தெரிந்து கொண்டு பலபேர் அதனை பின்பற்றி, சிலரைத் தவிர பலபேர் தோல்வியே கண்டு வாழ்க்கையில் பின்தங்கி இருப்பதை அடியேன் (ஆசிரியர்) சுமார் 37 வருட அனுபவத்தில் கண்டு, இதில் நல்லது நடப்பதும், கெட்டவையாக நடப்பதும் இந்த அந்தராய கர்மாவினால்தான் என்பதை அறிந்து,

மேற்குறிப்பிட்ட உங்கள் அனைத்து சந்தேகங்களுக்கும், முடிந்தவரை நீங்களே உங்கள் ஜாதகத்தைப் பார்த்து அதில் உள்ள லக்னம், நட்சத்திரங்கள், ராசிகளின்படி என்ன செய்யலாம் என்பதையும், எப்படி நீங்கள் கடைப்பிடித்தால் பெரும்பாலும் வாழ்க்கையில் இந்த அந்தராய கர்மாவை வெற்றி பெற்று நல்ல

நிலைமையோடும் வாழலாம் என்றும் நீங்கள் எதை, எப்படி அமைத்துக் கொண்டால் நன்மைகள் தரும் போன்ற விஷயத்தை அடியேன் அனுபவ ரீதியாக பல ஆயிரம் ஜாதகங்களைக் கண்டு பலபேருக்கும் (ஆசிரியர்) இப்புத்தகத்தில் உள்ளவாறு கணித்துச் சொல்லி பயன் அடைந்தவர்கள் ஏராளம் என்பதைக் கருத்தில் கொண்டுதான் இந்த அனுபவத்தின் பலனாக நீங்களும் சரியாக பலனடைய வேண்டும் என்பதற் காகவே இதனைக் கொடுத்து மகிழ்கிறேன். ஜாதகம் இல்லாத வர்கள், தெரியாதவர்கள் நல்ல ஜோதிடரை அணுகி தெரிந்து கொள்வது நல்லது.

**குறிப்பு:**

1. இதனைத் தெரிந்துகொண்டு பின்பற்றி செயல்படுவதற்கு முன்பு ஒருமுறை தங்கள் ஜாதகத்தையும் பார்த்து ஆலோசிப்பது மிகவும் நல்லது.

2. காரணம் அடியேனால் கொடுக்கப்பட்டுள்ள லக்கினம், நட்சத்திரம், ராசிகளின்படி உள்ள அத்துணை விஷயமும் பலப்பல பேர்கள் பயனடைந்ததைக் கருத்திற்கொண்டு பொதுவாக கொடுக்கப்பட்டதாகும். இருந்தாலும் ஓர் ஆலோசனையும் செய்து கொள்வது நல்லது என்பதால் இதனைச் சொல்கிறேன்.

வாழ்த்துக்கள்.

**லக்கினம் : மேஷம்**

**நட்சத்திரங்கள் : அஸ்வினி – 4 பாதம், பரணி 4 பாதம் கிருத்திகை 1– ம் பாதம்**

**இராசி : மேஷம்**

## 1. வெற்றி தரும் படிப்பை தேர்ந்தெடுக்க:

1. கணிணி (கம்ப்யூட்டர் சம்பந்தப்பட்ட அனைத்தும்).
2. அழகுக்கலை, ஃபேஷன் டிசைனிங், உணவு சம்பந்தப் பட்டவைகள்.
3. அரசாங்கம் சம்பந்தப்பட்ட கல்விகள் அனைத்தும்.
4. கணக்கு சம்பந்தப்பட்டவையில் வழக்குரைஞர், ஆசிரியர் சம்பந்தப்பட்ட கல்வியும்.
5. இரும்பு எந்திரங்கள், மெக்கானிக்கல், போக்குவரத்துத் துறை சம்பந்தப்பட்ட கல்விகள், விருப்பம் அதிகமாக இருந்தால் சிவில் என்ஜினீரிங் படிக்கலாம்.
6. உங்கள் ஜாதகத்தில் செவ்வாய், சூரியன் பலம் பெற்று இருந்தால் காவல்துறை, இராணுவத்துறை சம்பந்த படிப்பும் படிக்கலாம்.

## 2. உத்தியோக வேலை அமைப்புகள்:

1. 33 வயதிற்கு முன் நிரந்தரமாக எதிர்பார்ப்பு உள்ளபடி வேலை வாய்ப்பும், தொழிலும் அமைவது கடினம்.

2. அப்படி அமைந்தாலும் நிரந்தரமாக இருக்கக்கூடிய சூழல் ஏற்படாது. சிலருக்கு வெளிநாட்டு வேலை அமைப்பும் உண்டு.

3. சிலருக்கு பிறந்த ஜாதகப்படி 30 வயதிற்குள் உத்தியோகம் கிடைத்துவிடும். அதனால் கண்டிப்பாக மன அழுத்தத்துடன் வேலை செய்யும்படி இருக்கும்.

4. நீங்கள் தமிழ் மாதத்தில் ஐப்பசி, கார்த்திகை, பங்குனி மாதத்தில் பிறந்திருந்தால் அரசாங்க உத்தியோகம் கிடைப்பது அரிது. காசு கொடுத்து ஏமாறாதீர்கள். பணம் கொடுக்காமல் முயற்சி செய்யுங்கள்.

5. அலுவலகப்பணி, இரும்பு தொழிற்சாலை, தொழிற்கூடம், அழகுநிலையம், கலைத்துறை, உணவகம் துறை, பட்டறை, ரப்பர் சம்பந்தப்பட்ட துறைகளில் வேலை அமையவும், பிறந்த ஜாதகப்படி சில சொற்ப மாறுதல் உள்ள வேலை அமையவும் வாய்ப்புண்டு.

## 3. தொழில் வியாபார அமைப்பு:

1. இரும்பு சம்பந்தப்பட்ட அனைத்துத் தொழிலும் அமையலாம்.

2. ரியல் எஸ்டேட், வாகன சம்பந்தப் பட்டவைகள், ஸ்டுடியோ, கேமரா, நடிப்பு.

3. ஃபேன்சி பொருள் விற்பனை, பழக்கடை, பழச்சாறு மற்றும் குளிர்பானங்கள் சம்பந்தப்பட்ட கடைகள்.

4. அடகுக் கடை, நகைக்கடை, வட்டித் தொழில் கவனத்துடன் ஜாதகப்படி பார்த்து அமைக்கலாம்.

5. கூட்டுத் தொழில் கூடாது. யாரையும் முதலில் நம்பி தொழில் அமைத்தால் காலம் போகப் போக வருந்தவேண்டி வரும்.

## 4. திருமண விவரங்கள்:

1. ஆண் பிள்ளைகளுக்கு 27வயதிற்கும், அதற்கு மேலும், பெண் பிள்ளைகளுக்கு 25 வயதிற்கும் அதற்கு மேலும் திருமணம் செய்வது நல்லது.
2. பிறந்த ஜாதகத்தில் கிரக அமைப்புகள் மிக நன்றாக இருந்தால் ஆண் 25 வயது. பெண் 23 வயதிலும் திருமணம் செய்யலாம்.
3. பொதுவாக இவர்களுக்கு வசிக்கும் இடத்தில் இருந்து சுமார் 25 கிலோமீட்டருக்கு மேல் 200 கிலோமீட்டருக்குள் மேற்கு, கிழக்கு சம்பந்தப் பட்ட திசைகளில் தான் வரன் அமையும்.
4. அஸ்வினி நட்சத்திரத்தில் பிறந்த ஆண், பெண் இவர்கள் நீங்களாக காதலில் சிக்கினால் அது பெரும்பாலும் சரியான வாழ்க்கை அமையாது.
5. பரணி நட்சத்திரத்தில் பிறந்தவர்கள் தானே தேடி வரும் காதல் விஷயத்தில் கவனம் அவசியம். அதனால் வேதனை வரக்கூடும். பிரியப்பட்டு திருமணம் செய்திருப்பவர்கள் விட்டுக் கொடுத்து வாழ்வது நல்லது.

## 5. கவனமாக இருக்கவேண்டிய விஷயங்கள்:

1. உங்கள் வாழ்க்கையின் முன் பகுதியில் நட்புகள், உறவுகள், சுற்றத்தார்கள், உடன் பழகுபவர்கள் அனைவரிடத்திலும் மிகக் கவனம் இல்லாமல் பழகினால் ஏமாற்றம் அடைவீர்கள்.
2. அதனால் முற்பகுதியில் கவனமாக இருங்கள். அதைப்போல 33 வயதிற்குள், தொழில், வியாபாரம் ஆரம்பித்து கடன் படாதீர்கள்.
3. இடையில் படிப்பையும் உங்கள் முயற்சிகளையும் விட்டு விடாதீர்கள். கோபத்தைக் குறைத்துக் கொண்டு விட்டுக் கொடுத்து வாழ்க்கை நடத்தினால் நிம்மதி பெறலாம்.

4. கவனமில்லாமல், சிந்திக்காமல் எதையும் முடிவெடுத்து பிரச்சினையில் மாட்டிக் கொள்ளாதீர்கள்.

5. பயணங்களிலும், வாகனங்கள் ஓட்டுவதிலும் கண்டிப்பாக கவனம் தேவை. இரவு நேர பயணங்களை தவிர்ப்பது நல்லது.

## 6. தவிர்க்க வேண்டிய விஷயங்கள்:

1. எதிலும் அலட்சியமாக செயல்படுவதையும், பித்த சம்பந்தபட்ட, உணவுகளையும்,
2. அவசரத்தையும், குழப்பத்தையும்,
3. ஒரு முறையாவது புண்ணிய ஸ்தலத்திற்கு போகாதிருப்பதையும்,
4. கட்டாயம் தியானம், உடற்பயிற்சி செய்யாமல் இருப்பதையும்,
5. மிக வைராக்கியமாக இருப்பதையும், சுத்தமில்லாமல் இருப்பதையும், தாழ்வு மனப்பான் மைகளையும் தவிர்க்க வேண்டும்.

## 7. நினைத்தபடி காரியம் நிறைவேறிட தீர்வு தரும் வழிபாடுகள்:

1. இந்த நட்சத்திரத்தில் உள்ளவர்கள் நீங்கள் பிறந்த தமிழ் மாதத்தில் அல்லது ஆங்கில மாதத்தில் வரும் அஸ்வினி, பரணி, கிருத்திகை நட்சத்திரத்தில் சித்ரகுப்தர் ஆலயம் சென்று
2. பால் அபிஷேகம் செய்து, 7 வித பிரசாதம் படைத்து, உங்கள் கைகளால் தானம் கொடுத்து வருவது மிகவும் நற்பலன் தரும்.
3. வருடம் ஒருமுறை முருகன் கோயிலில் நினைவிலிருக்கும்படி ஏதேனும் ஒரு பூஜை பொருட்கள் வாங்கிக் கொடுத்து வருவது குறித்த வயதிலேயே மேற்குறிப்பிட்ட நற்பலன்கள் அனைத்தும் எளிதில் சித்தியாகும். இங்கு ஆசிரியர் ஆஸ்ரமத்தில் உள்ள ஷடாட்சர ஷண்முகருக்கும் கொடுக்கலாம். விவரங்களுக்கு அலைபேசி எண்கள்:9600396444/7444.

சுபம்.

லக்கினம் : ரிஷபம்

நட்சத்திரங்கள் : கிருத்திகை – 3 பாதம்,
ரோகிணி – 4 பாதம்
மிருகசீரிஷம் –2 பாதம்

இராசி : ரிஷபம்

### 1. வெற்றி தரும் படிப்பை தேர்ந்தெடுக்க:

1. எழுத்துத்துறை, வழக்குத் துறை, பிரிண்டிங் டெக்னாலஜி,
2. கணக்கு அக்கவுண்ட் துறை, ஜெனிடிக் விஞ்ஞானம், ஆசிரியர் துறை,
3. போக்குவரத்து அதிகாரி துறைகள், எலக்ட்ரிக், எலக்ட்ரானிக் துறைகளும்,
4. பார்மசிகள், கம்ப்யூட்டர், சினி ஃபோட்டோகிராபி, அனி மேஷன், எடிட்டிங்,
5. வெளிநாட்டிலும் படிக்கலாம் மாற்று மருத்துவ சம்பந்தப்பட்ட படிப்புகளும் படிக்கலாம்.
6. ஓட்டல், உணவு சம்பந்தப்பட்ட ஓட்டல் மேனேஜ்மென்ட் சம்பந்தப்பட்ட படிப்பு, மெரைன் இன்ஜினீயர் இவைகளையும் தேர்ந்தெடுக்கலாம்.

## 2. உத்தியோக வேலை அமைப்பு:

1. அரசாங்க முயற்சி பெரும்பாலும் கைகூடும். நம்பிக்கையாக முயற்சிக்கவும். வங்கி வேலைகள் உட்பட.

2. 33 வயதிற்கு மேல்தான் ஒருசிலருக்கு நிரந்தர வேலை அமைப்பும், உயர்வும் கிடைக்கும்.

3. ஐப்பசி மாதம், மார்கழி மாதம் பிறந்தவர்கள் காசு கொடுத்து உத்தியோகம் தேடுவதைத் தவிர்க்கவும்.

4. அலுவலகப் பணிகள், காவல்துறை பணிகள், தொழிற்சாலை, யந்திர இயக்கம், கலை, சினிமா துறைகள், பேச்சாளர்கள், வாகன துறை, சீருடை அணியும் துறைகள், நகைகடைகள், அரசாங்க துறை

5. ஏற்றுமதி, இறக்குமதி துறையிலும், வெளிநாட்டில், தொழிற் சாலைகள், இன்ஜினீயர் சம்பந்தப்பட்ட துறைகளில், சிலருக்கு மருந்து துறைகளிலும் வேலை அமையும். சிலருக்கு ஜாதகப்படி மாறி இருக்கலாம். அவர்கள் ஆலோசனை செய்வது நல்லது.

## 3. தொழில் வியாபார அமைப்பு:

1. ஆபரண சம்பந்தப்பட்டவைகளும், ஓட்டல் உணவு சிறு கடைகள் போன்றவைகளும் அதில் கூட்டு தொழில் கூடாது.

2. எலக்ட்ரிக், எலக்ட்ரானிக் தொழிலிலும், பழக்கடைகள், பழைய இரும்பு வாங்கி விற்பது போல, பழைய பேப்பர் புத்தகம் வாங்கி விற்பதும்

3. பத்திர எழுத்தாளர், ஜெராக்ஸ் கடை, உடல் பரிசோதனைக் கூடம், ஜவுளி சம்பந்தப் பட்ட வியாபாரம்.

4. ஓட்டுனர், வாகன தொழில், பர்னிச்சர் தொழில், கமிஷன் தொழில்கள், கம்ப்யூட்டர் தொழில், ஏற்றுமதி, இறக்குமதி தொழில்.

5. பைனான்ஸ், அடகுக் கடை, உருக்கு ஆலை, விவசாயம், தானிய சம்பந்தப் பட்ட தொழிலும், வியாபாரமும் அமையலாம்.

குறிப்பு: எதிலும் அனுபவமில்லாமலும், 30 வயதிற்குள்ளும், யோசிக்காமலும், சிந்திக்காமலும் சட்டென தொழில் ஆரம்பிப்பது தவறு. அனுபவம் உள்ளவர்களின் ஆலோசனை பெற்று செய்வது அவசியம்.

## 4. திருமண விவரங்கள்:

1. பெண் பிள்ளைகளுக்கு 25 வயதிற்கு மேலும், ஆண் பிள்ளைகளுக்கு 27 வயதில் இருந்து 30 வயதிற்குள்ளும் திருமணம் செய்வது நல்லது.

2. பெண் பிள்ளைகள் காதல் விஷயத்தை கண்டிப்பாகத் தவிர்ப்பது நல்லது. சிலருக்கு ஆண், பெண் இருவருக்கும் இரண்டு திருமணம் ஏற்பட வாய்ப்புண்டு.

3. திருமண முடிவு ஏற்பாட்டால் இடையில் படிப்பை விட்டு விடாதீர்கள். அதைப்போல ஆண்பிள்ளைகள் உத்தியோகமோ, வேலையோ, தொழிலோ சரியாக அமைத்துக் கொள்ளாமல் திருமணத்தைச் செய்து கொள்வது நல்லதல்ல.

4. பெரும்பாலும் சுமார் 40 கிலோமீட்டர் தாண்டி 140 கிலோ மீட்டர் தொலைவிற்குள் வரன் அமையும். அந்த வரன் உள்ள ஊரில் சொல்லுகின்றபடி பெருமாள் கோவிலோ, முருகன் கோயிலோ, பச்சையம்மன் கோயிலோ இருக்கும்.

5. வரன்கள் பெண்ணாகவோ, ஆண்பிள்ளையாகவோ இருப்ப வர்களுக்கு அரசாங்கம், தனியார் துறையில் பணிபுரியும் வரனும், சிலருக்கு தொழில் வியாபாரம் செய்யும் வரனும் அமையலாம்.

## 5. கவனமாக இருக்கவேண்டிய விஷயங்கள்:

1. பலபேருக்கு படிப்பு நன்றாக இருக்கும். ஆனால் நீங்களாக கெடுத்துக் கொள்வது தவறு.

2. நல்ல அறிவு, நல்ல புத்திக் கூர்மை, நல்ல உழைப்பும் இருக்கும். ஆனால், இவையனைத்தும் உங்கள் கோபத்தாலும், குழப்பத்தாலும் கெட்டு விடும். மாற்றிக் கொள்வது நல்லது.

3. அளவுக்கதிகமாக ஆசைப்பட்டு செய்கின்ற செயலால் பின்னால் கடன்பட்டு, மோசபட்டு நிற்க நேரிடும், கவனம் அவசியம்.

4. புகழுக்கு ஆசைப்படுவீர்கள். அதனால் ஏமாறுவீர்கள். கவனத் துடனும் புகழ்பவர்களிடம் ஜாக்கிரதையாகவும் இருங்கள்.

5. அடுத்தவரை நம்பி செயல்படும் எந்த விஷயமாக இருந்தாலும் அது கடைசியில் விரயமும், கவலையும்தான் மிஞ்சும். அதே நேரத்தில் எனக்கு எல்லாம் தெரியும் என்ற எண்ணத்தில் அவசரப்பட்டு எதையும் செய்யாதீர்கள்.

6. வாகனங்கள் ஓட்டுவதிலும், பயணங்கள் செய்வதிலும் கண்டிப்பாக கவனமும், பொறுமையும் அவசியம். அதைப்போல சொத்துகள் வாங்குவதிலும், விற்பதிலும் கண்டிப்பாக கவனமாகவும் ஆலோசித்தும் செயல்படுவது நல்லது.

## 6. தவிர்க்க வேண்டிய விஷயங்கள்:

1. வாகனத்தை வேகமாக ஓட்டுவதையும், போதை வஸ்துவை பயன்படுத்திவிட்டு வாகனம் ஓட்டுவதையும்

2. தாய் தந்தையரின் பேச்சைக் கேட்காமல் பிள்ளைகள் செயல்படுவதையும், அதைப்போல பெற்றோர்கள் பிள்ளைகள் மீது கவனமில்லாமல் இருப்பதையும்

3. பங்காளிகள் விஷயத்தில் கவனமில்லாமல் இருந்தால் பிரச்சனைகளும், சிலருக்கு சொத்துகளினால், பிரச்சனையும் வழக்கும் வரக்கூடும்.

4. உத்தியோக முயற்சி, தொழில், வியாபாரம் செய்யும் முயற்சி அடுத்தவரை நம்பி செய்வதை கண்டிப்பாக தவிர்க்கவும்.

5. 30 வயதிற்குள் கண்டிப்பாக சுயதொழில் வியாபாரம் ஆரம்பிப்பதும், கடன் வாங்குவதையும் தவிர்க்கவும்.

## 7. நினைத்தபடி காரியம் நிறைவேறிட வழிபாடுகள்:

1. ஆண்கள் தினமும் காயத்ரி மந்திரம் சொல்லி, சூரிய நமஸ்காரமும், பெண்கள் சூரிய காயத்ரி சொல்லி சூரிய நமஸ்காரமும் செய்ய வேண்டும்.

2. வருடம் இரண்டு பௌர்ணமிக்கு அடியேனின் (ஆசிரியரின்) ஆசிரமம் வந்து ஷடாட்சர ஷண்முகரை வழிபட்டு, பாலில் பிரசாதம் படைத்து, கோபூஜை செய்து தானம் கொடுப்பது நல்லது. ஏன் என்றால் இங்கு அதற்கேற்ப திருமூர்த்திகளையும், அம்பாளையும் பிரதிஷ்டை செய்துள்ளேன்.

3. வெள்ளிக்கிழமைதோறும் நம் ஆசிரமத்தில் உள்ள வராகி அம்பாளுக்கு பச்சரிசி மாவில் நெய்தீபம் போட்டு, புளியோதரை படைத்து தானம் கொடுக்கலாம். அதைப் போலவே இங்குள்ள கல்லால மரத்திலும் இந்த வழிபாட்டை செய்யலாம். இங்கு (ஆசிரியர் ஆஸ்ரமம்) வந்து இலவசமாக வழிபாடுகள் செய்ய விவரங்களை அறிய அலைபேசி எண்கள்: 96003 96444 /7444.

சுபம்.

| | | |
|---|---|---|
| லக்கினம் | : | மிதுனம் |
| நட்சத்திரங்கள் | : | மிருகசீரிஷம் –2 பாதம், திருவாதிரை– 4 பாதம் புனர்பூசம்–3 பாதம் |
| இராசி | : | மிதுனம் |

## 1. வெற்றி தரும் படிப்பை தேர்ந்தெடுக்க:

1. ஃபேஷன் டிசைனிங், மனநல மருத்துவம், கலைத்துறைகள் சம்பந்தபட்டவைகள்.

2. பிரிண்டிங் சம்பந்தப் பட்டவைகளும், Ph.D. விரிவுரையாளர் சார்ந்ததும், I.A.S., I.P.S., போன்றவையும் கட்டிடக்கலை, அழகுக் கலை சார்ந்ததும், இன்ஜினீரிங் சம்பந்தப் பட்டவைகளும்,

3. கம்ப்பூட்டர் அறிவியல், மாற்று மருத்துவங்களான பல், எலும்பு சம்பந்தமும், மயக்க மருத்துவம், சித்தா, ஆயுர்வேத மருத்துவம் சார்ந்தவைகளும்.

4. மெக்கானிக்கல் இன்ஜினியர், போக்குவரத்து அதிகாரியாகவும், உணவு சம்பந்தப்பட்டவைகளும்,

5. விமானத் துறையும், சீருடைப் பணியாளர் சம்பந்தப் பட்ட வைகளைத் தேர்ந்தெடுக்கலாம். அந்தந்தத் துறையில் அனுபவமுள்ள அறிஞர்களின் ஆலோசனையை பின்பற்றி முயற்சிப்பது நல்லது.